RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20210

# தமிழ் சர்வதேச திருவள்ளுவர் நாட்காட்டி

## வே. அறிவுமணி [அ,*]

[அ] மின்னியல் துறை, அரசினர் பொறியியற் கல்லூரி, பர்கூர் - 635104, தமிழ்நாடு, இந்தியா.

# Tamil International Thiruvalluvar Calendar

## V. Arivumani [a, *]

[a] Department of EEE, Government College of Engineering in Bargur - 635104, Tamil Nadu, India.

Corresponding Author:
arivu.vp@gmail.com

Received : 08-01-2020
Accepted : 13-02-2020

Check for updates

**ABSTRACT**

A variety of calendars are currently in circulation. The English Gregorian Calendar is in use internationally. But there are some problems with using a standard calendar in Tamil. Thus the Thiruvalluvar calendar is created as part of the effort to create a standard calendar in Tamil. It can be used by everyone, regardless of caste, religion, language or ethnicity. The Tamil International Thiruvalluvar Calendar (Thasati) is based on the Thiruvalluvar Year and 13 thirukkural chapter groups as month names. In this calendar, All months have 28 days except the first month. The First month has 29 days in normal and 30 days in a leap year.

**Keywords:** Calendars, Gregorian, Thiruvalluvar, leap year

## About the Author



**V. Arivumani,** working as Assistant professor in department of Electrical and Electronics Engineering at Government College of Engineering, Bargur, Krishnagiri. He has 14 years of teaching experience. He obtained his Bachelor degree in madras university in 2003 via Dr.MGR. Engineering College. He obtained his post graduate degree in power system engineering at Anna University Chennai in 2006 via Government College of Technology Coimbatore. He interests in Tamil language, Calendar Calculations and Mathematical innovations apart from his technical ability.

## கட்டுரைச் சுருக்கம்

தற்போது பல்வேறு வகையான நாட்காட்டிகள் புழக்கத்தில் உள்ளன. ஆங்கில கிரிகோரியன் நாட்காட்டி சர்வதேச அளவில் பயன்பாட்டில் உள்ளது. ஆனால் தமிழில் ஒரு நிலையான நாட்காட்டி பயன்படுத்துவதில் சில சிக்கல்கள் உள்ளன.

ஆதலால் தமிழில் ஒரு நிலையான நாட்காட்டியை உருவாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக திருவள்ளுவர் நாட்காட்டி உருவாக்கப்படுகிறது. இது சாதி, மதம், மொழி, இனம் தாண்டி அனைவரும் பயன்படுத்தலாம். தமிழ் சர்வதேச திருவள்ளுவர் நாட்காட்டி (தசதி) திருவள்ளுவர் ஆண்டை அடிப்படையாகவும் 13 மாதங்களை கொண்டும் உருவாக்கப்படுகிறது.

## முன்னுரை

தற்போதைய தமிழ் நாட்காட்டி சூரிய சித்தாந்தத்தின் அடிப்படையிலான இந்து நாட்காட்டிபடி பின்பற்றப்படுகிறது. ஆங்கில நாட்காட்டியானது சாயன நாட்காட்டி ஆகும். இதில் 12 மாதங்கள் நிரந்தரமாக அதாவது எல்லா ஆண்டிலும் ஒரே மாதிரியான அமைப்பில் உள்ளவாறு அமைக்கப்பட்டுள்ளது. மிகை (லீப்) ஆண்டில் பிப்ரவரி மாதம் மட்டும் 29 நாட்கள் வருகிறது. ஆனால் தற்போதைய தமிழ் நாட்காட்டியில் உள்ள மாதங்களுக்கு நிலையான நாட்கள் இல்லை. உதாரணமாக சித்திரை மாதத்தில் 30, 31, 32 நாட்கள் மாறி மாறி வருகிறது. இந்த சிக்கலான நாட்காட்டி அமைப்பின் காரணமாக நாம் ஆங்கில நாடகாட்டிப்படி பிறந்த நாள், திருமண நாள் போன்ற பல்வேறு நிகழ்வுகளை பின்பற்றுகிறோம்.

தமிழ் கலாச்சார நிகழ்வுகள் அமாவாசை, பௌர்ணமி, கிருத்திகை போன்ற நாள் நட்சத்திரங்களை அடிப்படையாக கொண்டு வருகின்றன. தமிழ் நாட்காட்டிப்படி தை இரண்டாம் நாள் திருவள்ளுவர் தினமாக கொண்டாடப்படுகிறது. ஆடி 18 ஆம் நாள் ஆடிப்பெருக்காக உள்ளது. சித்திரை 1ஆம் நாள் தமிழ் வருட பிறப்பாக உள்ளது. தை முதல் வாரம் பொங்கல் ஆக உள்ளது. இந்த நிகழ்வுகளை நாம் நிலையாக சர்வதேச நாட்காட்டிக்கு இணையாக கொண்டாடலாம் (Rhea Moorthy Novels, 2020; Benjamin Woolley, 2001; Roscoe Lamont, 1920).

## திருவள்ளுவர் நாட்காட்டி

தற்போது ஒரு புதிய நாட்காட்டி வடிவமைக்கப்படுகிறது. திருவள்ளுவர் ஆண்டை அடிப்படையாக கொண்டு இது வடிவமைக்கப்பட்டுள்ளது. திருவள்ளுவர் ஆண்டு தை இரண்டாம் நாள் கொண்டாடப்படுகிறது. ஆங்கில நாட்காட்டிப்படி சனவரி 15 மற்றும் 16 ஆம் தேதிகளில் மாறி மாறி வருகிறது. அதே போல் பொங்கல் பண்டிகையான தை முதல் நாள் சனவரி 14 மற்றும் 15 ஆம் தேதிகளில் மாறி மாறி வருகிறது. புதிய நாட்காட்டி (நிரந்தரமாக) சனவரி 15 ஆம் நாள் தொடங்குகிறது.

திருக்குறளில் 13 இயல்கள் உள்ளன. அவைகளை 13 மாதங்களாக கொண்டு இந்த நாட்காட்டி உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது ஒரு ஆண்டுக்கு சராசரி ஆக 365.2425 நாட்கள் (கிரிகோரியன் நாட்காட்டி) உள்ளன. அவைகளை 13 மாதங்களாக பிரித்தால் ஒரு மாதத்திற்கு 28.0955769 நாட்கள் வருகிறது.

1 ஆண்டு = 365.2425 நாட்கள்

1 ஆண்டு = 29.2425+336 நாட்கள்

1 ஆண்டு = (29.2425 x 1) + (28 x 12) நாட்கள்

முதல் மாதம் 29 அல்லது 30 நாட்களை கொண்டும் மற்ற மாதங்கள் தலா 28 நாட்களை கொண்டும் இந்த நாட்காட்டி உருவாக்கப்பட்டுள்ளது.

## மதி

மாதம் (அ) திங்கள் என்பது நிலவு பூமியை சுற்றிவர ஆகும் கால அளவு ஆகும். தற்போது பலவகையான மாதங்கள் உள்ளன. சூரிய மாதம் என்பது 30 அல்லது 31 நாட்களை கொண்டதாகும் (ஒரு ஆண்டின் 12 இல் ஒரு பகுதி). சந்திர பௌர்ணமி மாதம் என்பது 29 அல்லது 30 நாட்களை கொண்டதாகும். நிலையான நட்சத்திரங்களின் அடிப்படையில் ஒரு மாதம் என்பது 27 அல்லது 28 நாட்களை கொண்டதாகும்.

தமிழில் மதி என்பதற்கு நிலவு என்பது பொருள். 28 நாட்கள் கொண்ட மாதத்திற்கு மதி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதன்படி ஒரு மதி என்பது 28 நாட்கள் (அல்லது) சரியாக 4 வாரங்கள் (672 மணிநேரம்/ 40,320 நிமிடங்கள் / 2419200 நொடிகள்) கொண்டஒருசுற்று. அதேபோல் ஒரு பாமதி (பெருமதி) என்பது 29 அல்லது 30 நாட்களை கொண்ட மாதம் ஆகும். ஒரு பாமதிக்கு 29.2425 நாட்கள் உள்ளது. மிகை ஆண்டில் பாமதி 30 நாட்களை கொண்ட பெரிய மாதம் ஆகும்..

| மதி எண் | திருக்குறள் இயல் | மதி | பிறக்கும் சர்வதேச தேதி | மொத்த நாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | பாயிரவியல் | பாமதி | சனவரி 15 | 29/30* |
| 2 | இல்லறவியல் | இல்மதி | பிப்ரவரி | 28 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 13/14* | |
| 3 | துறவறவியல் | துறமதி | மார்ச் 13 | 28 |
| 4 | ஊழியல் | ஊழ்மதி | ஏப்ரல் 10 | 28 |
| 5 | அரசியல் | அரசுமதி | மே 8 | 28 |
| 6 | அமைச்சியல் | அமைச்சுமதி | ஜூன் 5 | 28 |
| 7 | அரணியல் | அரண்மதி | ஜூலை 3 | 28 |
| 8 | கூழியல் | கூழ்மதி | ஜூலை 31 | 28 |
| 9 | படையியல் | படைமதி | ஆகஸ்ட் 28 | 28 |
| 10 | நட்பியல் | நட்புமதி | செப்டம்பர் 25 | 28 |
| 11 | குடியியல் | குடிமதி | அக்டோபர் 23 | 28 |
| 12 | களவியல் | களமதி | நவம்பர் 20 | 28 |
| 13 | கற்பியல் | கற்புமதி | டிசம்பர் 18 | 28 |

* - மிகை (லீப்) ஆண்டில்

## சிறப்புகள்

1. தற்போது உலகத்தில் எங்கும் (சில சந்திர நாட்காட்டி தவிர) 13 மாத நாட்காட்டி புழக்கத்தில் இல்லை. திருக்குறளில் 13 இயல்கள், 133 அதிகாரங்கள், மற்றும் 1330 குறள்கள் உள்ளன. இதனை நினைவூட்டும் விதமாக நாம் 13 மாத நாட்காட்டியை பயன்படுத்தலாம்.
2. தமிழில் 12 உயிர் எழுத்துக்களும் ஒரு ஆய்த எழுத்தும் உள்ளது. அது போல் 13 மாதங்களும் திருவள்ளுவர் நாட்காட்டிக்கு உயிரோட்டமாக விளங்குகின்றன.

3. உயிர் எழுத்துக்கள் 12 என்பதுபோல் 28 நாட்கள் கொண்ட மாதங்கள் 12. ஆய்த எழுத்து வித்தியாசப்படுவது போல் பாமதி என்ற மாதமும் மற்ற மாதங்களில் இருந்து வித்தியாசப்படுகிறது.
4. திருவள்ளுவர் நாட்காட்டி சனவரி 15 இல் தொடங்குகிறது. அது போல் ஆங்கில வருட பிறப்பு கற்புமதி 15இல் தொடங்குகிறது. இது போன்ற சிறப்பு வேறு எந்த நாட்காட்டிக்கும் இல்லை.
5. சர்வதேச கிரிகோரியன் நாட்காட்டியை போல் எந்த பண்டிகைக்கும் பிறந்த நாள், திருமண நாள் போன்ற நிகழ்வுகளையும் நிரந்தர நாள் ஆக கொண்டாடலாம்.
6. தற்போது புழக்கத்தில் உள்ள எந்த சுப நிகழ்வுகளையும் இது பாதிக்காது.
7. எல்லா ஆண்டிலும் 2ஆம் மாதம் முதல் 13 ஆம் மாதம் வரை நாட்காட்டி ஒரே அமைப்பில் இருக்கும்.
8. சர்வதேச நாட்காட்டியும் திருவள்ளுவர் நாட்காட்டியும் ஒரே கிழமையில் பிறக்கும்.

## தசதி

தசதி என்பது தமிழ் சர்வதேச திருவள்ளுவர் / திருக்குறள் நாட்காட்டி என்பதன் சுருக்கம் ஆகும்.

தற்போது தமிழ் புத்தாண்டு சித்திரையில் கொண்டாடப்படுகிறது. ஆனால் தமிழ் ஆண்டான திருவள்ளுவர் ஆண்டு தையில் பிறக்கிறது. இந்த குழப்பத்தை நீக்கும் விதமாக, மதம் சாரா தமிழ் கலாச்சார நிகழ்வுகளை நினைவூட்டும் விதமாக ஜனவரி 15 ஐ தசதி புத்தாண்டு (அல்லது) வள்ளுவ புத்தாண்டு என அறிவிக்கலாம்.

கீழ்கண்ட குறளின் மூலம் தசதி மாதங்களை (திருக்குறள் இயல்களை) நினைவில் கொள்ளலாம்.

பாயில் துறவூழ் அரசமைச் சரங்கூழ்
படைநட்பு குடிகள கற்பு

இது தசதிக்குறள் என அழைக்கப்படுகிறது.

## தசதினம்

தசதினம் என்பது சனவரி 15 ஐ முதல் நாள் ஆக கொண்டு வரும் தேதி வரிசை எண் ஆகும். சாதாரண ஆண்டில் தசத்தினம் 1 முதல் 365 ஆகவும் மிகை

ஆண்டில் 1 முதல் 366 ஆகவும் இருக்கும். கிரிகோரியன் தேதி வரிசை எண்ணுக்கும் தசதினத்திற்கும் 14 நாட்கள் (2 வாரங்கள்) வித்தியாசம் இருக்கும்.

முதல் மதி

$$T = D$$

மற்ற மதிகளுக்கு

$$T = 28(M-1)+D+L$$

T = தசதினம்

D = தேதி

M = மாத எண்

L = மிகை எண் (சாதாரண ஆண்டில் 0 மற்றும் லீப் ஆண்டில் 1 ஆகும்)

உதாரணமாக,

அரசுமதி 4 க்கு நிகரான தசதினம் கீழ்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

அரசுமதி என்பதை 5 வது மாதம் ஆகும்

M = 5

D = 4

T = 28(5-1)+4 = 112+4 = 116.

ஆங்கில தேதி வரிசை எண் 116+14=130 ஆகும்.

## தசதி இலச்சினை (லோகோ)

உலகிலேயே முதன்முறையாக தமிழ் சர்வதேச திருவள்ளுவர் (தசதி ) நாட்காட்டிக்கு ஒரு இலச்சினை உருவாக்கப்பட்டுள்ளது. இதில் திருவள்ளுவர் உருவம் மையத்தில் உள்ளது. தசதிக்குறள் இதனை சுற்றி உள்ளது. தசதி நாட்காட்டியை மிக சுருக்கமாக பாமதி 29/30 நாட்கள் என்றும் பிறமதி (மற்ற மாதங்களில்) 28 நாட்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.




சனவரி 15 நாட்காட்டிக்கு இணையான சர்வதேச நாட்காட்டி தினம் ஆகும். கிமு 31 என்பது திருவள்ளுவர் பிறந்த ஆண்டு ஆகும்.

### தசதி 2051

நடப்பு ஆண்டு (2020) திருவள்ளுவர் கணக்குப்படி தி.பி. 2051 ஆகும். இது மிகை ஆண்டு ஆகும். இதன்படி முதல் மாதமான பாமதி புதன்கிழமையிலும் மற்ற அனைத்து மாதங்களும் வெள்ளிக்கிழமையில் பிறக்கின்றன.

| பாமதி | பு | வி | வெ | ச | ஞா | தி | செ |
|---|---|---|---|---|---|---|---|
| 2051 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| மதி (2 முதல் 13 வரை) | வெ | ச | ஞா | தி | செ | பு | வி |
| பாமதி மட்டும் | 29 | 30 | | | | | |

தற்போதைய சில நிரந்தர நாட்காட்டிகள்

1. கிரிகோரியன் நாட்காட்டி
2. ஜூலியன் நாட்காட்டி
3. இந்திய தேசிய சக நாட்காட்டி
4. நானாசாகிப் சீக்கிய நாட்காட்டி
5. வங்காள நாட்காட்டி

## தசதி தைகழி நாட்காட்டி

எல்லா நாட்காட்டியில் பெரும்பாலும் 12 மாதங்களே புழக்கத்தில் உள்ளன. ஆதலால் 13 மாதங்கள் பயன்படுத்துவது சற்று சிரமமாக இருக்கும். ஆகவே 12 மாத நாட்காட்டியும் சர்வதேச அளவில் பயன்படுத்துவதற்காக ஒரு நாட்காட்டி உருவாக்கப்பட்டுள்ளது. தசதி தைகழி என்பது தமிழ் சர்வதேச திருவள்ளுவர் தை மார்கழி என்பதன் சுருக்கம் ஆகும்.

பொதுவாக தமிழ் மாதங்களில் வரும் நாட்கள் 29, 30, 31 மற்றும் 32 ஆகும். நிலவு மாதம் 29 அல்லது 30 மட்டுமே (அமாவாசை முதல் அமாவாசை வரை). சூரிய மாதம் சராசரியாக 30.436875 நாட்கள் ஆக அதற்கு 30 அல்லது 31 நாட்கள் மட்டுமே இருக்க முடியும்.

| மதி எண் | மாதம் | தமிழ் பெயர் | பிறக்கும் சர்வதேச தேதி | மொத்த நாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | தை | சுறவம் | சனவரி 14 | 30/31* |
| 2 | மாசி | கும்பம் | பிப்ரவரி 13/14* | 30 |
| 3 | பங்குனி | மீனம் | மார்ச் 15 | 30 |
| 4 | சித்திரை | மேழம் | ஏப்ரல் 14 | 31 |
| 5 | வைகாசி | விடை | மே 15 | 31 |
| 6 | ஆனி | ஆடவை | ஜூன் 15 | 31 |
| 7 | ஆடி | கடகம் | ஜூலை 16 | 31 |
| 8 | ஆவணி | மடங்கல் | ஆகஸ்ட் 16 | 31 |
| 9 | புரட்டாசி | கன்னி | செப்டம்பர் 16 | 30 |
| 10 | ஐப்பசி | துலை | அக்டோபர் 16 | 30 |
| 11 | கார்த்திகை | நளி | நவம்பர் 15 | 30 |
| 12 | மார்கழி | சிலை | டிசம்பர் 15 | 30 |

தமிழில் உயிர் எழுத்துக்கள் 12 உள்ளது. அதில் குறில் ஐந்தும் நெடில் ஏழும் இருக்கும். அதுபோல் நாட்காட்டியில் 31 நாட்கள் கொண்ட மாதங்கள் ஐந்தும் 30 நாட்கள் கொண்ட மாதங்கள் ஏழும் இருக்கும். மிகை ஆண்டில் ஒரு நாள் கூடுதலாக வருகிறது. அதன்படி திருவள்ளுவர் பிறந்த தை மாதத்தில் ஒரு நாள் கூடுதலாக வரும்படி செய்யப்படுகிறது.

## முடிவுரை

சர்வதேச அளவில் பயன்படுத்த ஏதுவாக இருவகையான நாட்காட்டிகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவை திருவள்ளுவர் ஆண்டை மையப்படுத்திய தசதி மற்றும் தைகழி நாட்காட்டிகளாகும். தசதியில் 12 மாதங்களும் 28 நாட்களோடு சமமாக வருவதால் இதனை அலுவலக பயன்பாட்டுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.

## References

Benjamin Woolley, The Queen's Conjurer: The science and magic of Dr. John Dee, adviser to Queen Elizabeth I (New York: Henry Holt, 2001) p. 173

Rhea Moorthy Novels, Website: https://rheamoorthynovels.blogspot.com/ (Retrieved on 01st January 2020)

Roscoe Lamont, (1920) The reform of the Julian calendar, Popular Astronomy 28, 18–32.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License